**Video script in Tamil:** There is no place for domestic and family violence in Australia.

| English | Tamil |
|---|---|
| There is no place for domestic and family violence in Australia. | ஆஸ்திரேலியாவில் வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறைக்கு இடமில்லை. |
| You and your family are protected by the law, | புதிதாக குடிவந்தவர்கள் மற்றும் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் உட்பட, |
| including new migrants and temporary visa holders. | நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறீர்கள். |
| In Australia, domestic and family violence is illegal. | ஆஸ்திரேலியாவில், வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறை சட்டவிரோதமானது. |
| Does your partner or a family member make you or your children feel afraid? | உங்கள் துணை அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் உங்களை அல்லது உங்கள் குழந்தைகளை பயப்பட வைக்கிறாரா? |
| Do they hit or hurt you or your children? | அவர் உங்களை அல்லது உங்கள் குழந்தைகளை தாக்குகிறாரா அல்லது காயப்படுத்துகிறாரா? |
| Do they expect you to have sex even if you don't want to? | நீங்கள் விரும்பாவிட்டாலும் உடலுறவு கொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறாரா? |
| Do they insult you? | அவர் உங்களை அவமதிக்கிறாரா? |
| Do they stop you from having your own money? | உங்களுக்கென்று சொந்தமாக பணம் வைத்திருப்பதை அவர் தடுக்கிறாரா? |
| Do they stop you from going places or seeing people? | நீங்கள் வெளி இடங்களுக்குச் செல்வதையும் மற்றவர்களைச் சந்திப்பதையும் அவர் தடுக்கிறாரா? |
| If this is happening, | இது நடைபெறுகிறதென்றால், |
| you could be experiencing domestic and family violence. | நீங்கள் வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையை அனுபவித்துக்கொண்டிருக்கலாம். |
| To seek help and support, | உதவி மற்றும் ஆதரவைப் பெற, |
| call the NSW Domestic Violence Helpline on 1800 65 64 63. | NSW குடும்ப வன்முறை உதவி மையத்தை 1800 65 64 63-இல் அழைக்கவும். |
| It's free and available 24 hours a day, 7 days a week. | வாரத்தின் 7 நாட்களும், 24 மணிநேரமும் கிடைக்கின்ற இலவச சேவை இதுவாகும். |
| To speak to someone in your language, | உங்கள் மொழியில் யாரிடமாவது பேச, |
| call the Translating and Interpreting Service on 131 450. | 131 450 என்ற எண்ணில் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவையை அழைக்கவும். |
| Say your language. | நீங்கள் எந்த மொழியில் பேச விரும்புகிறீர்கள் என்று கூறவும். |
| Ask them to connect you | 1800 65 64 63-இல் NSW குடும்ப வன்முறை உதவிமையத்துடன் |
| to the NSW Domestic Violence Helpline on 1800 65 64 63. | உங்களை இணைக்கும்படி அவர்களிடம் கேட்கவும். |

| | |
|---|---|
| If you or your children are in immediate danger, | நீங்கள் அல்லது உங்கள் குழந்தைகள் உடனடி ஆபத்தில் இருந்தால், |
| call Triple Zero (000) for emergency services. | அவசர சேவைகளுக்கு 000- ஐ அழைக்கவும். |